தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**14.06.2013 A.M**

---

## தமிழகத்தில் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவ மழை ஜூன் 1-ஆம் தேதியன்று கேரளத்தில் தொடங்கியது. இதனால் கடந்த இரு வாரங்களாக கேரளம், ஆந்திரம், கர்நாடகத்தில் பலத்த மழை பெய்து வருகிறது.

கேரளத்தின் உபரி மழை தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதிகளில் பெய்து வருகிறது. இதைத் தவிர வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது.

புதன்கிழமை மாலையிலிருந்து வால்பாறை, நீலகிரி, சின்னக் கல்லாறு, செங்கோட்டை, குளச்சல் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்து வருகிறது.

அதிகபட்சமாக வால்பாறையில் 60 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**வானிலை முன்னறிவிப்பு:**

வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. தரைக்காற்று பலமாக வீசக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வறட்சி நிவாரணம் எவ்வளவு?



வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எவ்வளவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் வியாழக்கிழமை விளக்கம் அளித்துள்ளார்.

இந்தப் பிரச்னை தொடர்பாக மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்த கருத்துகளுக்கு அவர் அளித்த விளக்கம்:

டெல்டா மாவட்டங்களில் 50 சதவீதத்துக்கு மேல் மகசூல் பாதித்த 3.61 லட்சம் ஏக்கர் நெற்பயிர்களுக்கு, ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம், 3.52 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.541.5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளில் இதுவரை 16.03 லட்சம் பேருக்கு ரூ.756.22 கோடி நிவாரண நிதி அளிக்கப்பட்டுள்ளது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்த விவசாயிகளுக்கு மட்டுமின்றி, அனைவருக்கும் நிவாரணம் அளிக்க வேண்டுமென வைகோ கூறியுள்ளார்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ், கடந்த நிதியாண்டில் சாகுபடி மேற்கொண்டு 50 சதவீதத்துக்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

பயிர் எடுப்புக் கணக்கைப் பொறுத்தவரையில் கிராம நிர்வாக அதிகாரிகளும், வேளாண்மைத் துறை அலுவலர்களும் இணைந்து, ஒவ்வொரு கிராமத்திலும் ஆய்வு செய்து 50 சதவீதத்துக்கும் மேல் பாதிப்பு ஏற்பட்டுள்ள பயிர்களை எந்தவித நிபந்தனையும் இன்றி கணக்கெடுத்துள்ளனர். எனவே, பயிர் எடுப்புக் கணக்கு முறையாகச் செய்யப்படவில்லை என்ற வாதமே வீண் வாதம் என்று அமைச்சர் தாமோதரன் விளக்கம் அளித்துள்ளார்.

## நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை நீடிப்பு: அணைகளின் நீர்மட்டம் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை நீடித்து வருவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

வியாழக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 7 மிமீ, பாபநாசம் கீழ் அணையில் 2 மிமீ மழை பதிவானது. அணைக்கு விநாடிக்கு 1335.63 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 65.90 அடியாக இருந்தது.

சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 81.27 அடியாக இருந்தது. அணையில் 3 மிமீ மழை பெய்துள்ளது. மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 70.64 அடியாக இருந்தது.அணைக்கு விநாடிக்கு 77 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் 5.8 மிமீ மழை பதிவானது.

## திருநீர்மலை பேரூராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

பல்லாவரத்தை அடுத்த திருநீர்மலை பேரூராட்சியில் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வுப் பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது.

திருநீர்மலை ஜெயஸ்ரீ முத்துகுமாரசாமி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணியை திருநீர்மலை பேரூராட்சித் தலைவர் வி.கலைவாணி காமராஜ் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசும்போது, மனித வாழ்விற்கு மட்டுமல்லாமல் அனைத்து உயிர்களுக்கும் நீர் உயிர்ஆதாரமாகத் திகழ்வதால் இயற்கை நமக்கு வான் மூலம் வழங்கும் மழைநீரை நாம் துளிகூட வீணாக்கக் கூடாது. அதை செல்வமாகக் கருதி சேமிக்கும் பழக்கத்தை மேற்கொள்வது அவசியம் என்றார்.

பின்னர் பள்ளி மாணவர்கள் உயிர்த்துளியாய் வரும் மழைத்துளியை வீணாக்காமல் பூமியில் சேமிப்போம், நிலத்தடி நீர் உயர மழைநீர் சேமிப்போம் என்பன உள்ளிட்ட வாசகங்கள் பொறித்த பதாகைகள் ஏந்தி, திருநீர்மலை பேரூராட்சியின் முக்கிய சாலைகள் வழியாக ஊர்வலமாகச் சென்றனர். திருநீர்மலை பேரூராட்சி செயல் அலுவலர் வி.பிரேமா, பேரூராட்சி உறுப்பினர்கள் பி.ஷர்மி, சண்முகம், வி.ராஜேந்திரன் உள்ளிட்டோரும் பேரணியில் பங்கேற்றனர்.

## வறட்சி நிவாரணத் தொகையை நாளைக்குள் வழங்கிட வேண்டும்

அரசு வழங்கும் வறட்சி நிவாரணத் தொகையினை நாளைக்குள் (ஜூன் 15) விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும் என தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் புலியடிதம்பம், நாகாடி, அனுமந்தக்குடி, கண்ணங்குடி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு சென்று விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்கி வரும் பணிகளை வியாழக்கிழமை மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு செய்தார்.

அப்போது புலியடிதம்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வறட்சி நிவாரணத் தொகை வழங்கி வருவதை ஆய்வு செய்த ஆட்சியர், நிவாரணம் வழங்கப்படாத விவசாயிகளுக்கு உடனடியாக தொகையை அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைத்திட வேண்டுமென வலியுறுத்தினார். தொடர்ந்து நாகாடி, அனுமந்தக்குடி, கண்ணங்குடி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்குச் சென்று அங்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்கி வருகின்ற பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

புலியடிதம்பம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக்கடையில் பொருள்களின் இருப்பு குறித்து ஆய்வு செய்து குடும்ப அட்டைகளுக்கு தேவையான பொருள்கள் போதிய அளவு இருப்பில் வைத்து உடனுக்குடன் வழங்க வேண்டுமென விற்பனையாளர்களிடம் அறிவுறுத்தினார். சடையமங்கலம் ஊராட்சி அரசு நடுநிலைப்பள்ளிக்கு சென்று மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டதா என ஆய்வு செய்தும், புதிய மாணவர்களை அரசுப் பள்ளியில் அதிகளவில் சேர்த்திட வேண்டும் என தலைமையாசிரியரிடம் வலியுறுத்தினார் ஆட்சியர்.

இந்த ஆய்வின் போது தேவகோட்டை வட்டாட்சியர் சீனிவாசன், கூட்டுறவு வங்கி செயலர் செந்தில்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 34.92 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 34.92 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,648 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.72 டி.எம்.சி.

## சோலையாறு அணை நீர்மட்டம் 45 அடி

வால்பாறையில் பெய்துவரும் பலத்த மழையால் சோலையாறு அணையின் நீர்மட்டம் 45 அடியாக உயர்ந்துள்ளது.

வால்பாறை பகுதியில் கடந்த இரு வாரங்களாக பருவமழை பெய்து வருகிறது. இதனால் வறண்டு கிடந்த ஆறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. மேலும் வால்பாறையை அடுத்த நீராறு, சோலையாறு அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயரத் துவங்கியது.

கடந்த சில தினங்களாக வால்பாறை எஸ்டேட் பகுதிகளில் இடைவிடாது பலத்த மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை காலை வால்பாறை- 39 மி.மீ, சோலையாறு -60 மி.மீ, அப்பர் நீராறு- 38 மி.மீ, லோயர் நீராறு- 59 மி.மீ. என மழை அளவு பதிவாகியுள்ளது. கடந்த இரண்டு தினங்களில் சோலையாறு அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்து தற்போது 45 அடியாக உள்ளது.

## மஞ்சூரில் சூறாவளி காற்று, மழை

மஞ்சூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சில நாள்களாக மழையுடன் சூறாவளிக் காற்று வீசுவதால், மின் விபத்துகள் ஏற்படலாமென மின்வாரியம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து குந்தா மின்பகிர்மான வட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

நீலகிரி மின்பகிர்மான வட்டம், குந்தா உபகோட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் பெரும்பாலான மின் கம்பங்களும், கம்பிகளும் தேயிலைத் தோட்டங்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் செல்கிறது. தற்போது மழையுடன் பலத்த சூறாவளிக் காற்று வீசுகிறது. இதனால் மின் கம்பங்கள் மற்றும் கம்பிகள் மீது மரங்கள் விழுவது, மின்கம்பிகள் அறுந்து தொங்குவது உள்ளிட்ட நிகழ்வுகள் ஏற்படலாம்.

இத்தகைய நிகழ்வுகளில் பொதுமக்கள் உடனடியாக அந்த கம்பங்களையோ, கம்பிகளையோ அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபடக்கூடாது.

இதுபோன்ற நிகழ்வு ஏற்பட்டால் உடனடியாக மின்வாரிய அலுவலகத்துக்கு தகவல் அளிப்பதுடன், விழுந்து கிடக்கும் கம்பிகள் அருகே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

மின்கம்பங்கள் விழுவது, கம்பிகள் அறுந்து தொங்குவது கண்டறியப்பட்டால், கீழ்குறிப்பிடப்பட்டுள்ள எண்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

உதவி செயற்பொறியாளர்-9445851675, குந்தா பிரிவு அலுவலகம்-0423-2509227, உதவி மின் பொறியாளர்-9445851676, எடக்காடு பிரிவு அலுவலகம்-0423-2508008, உதவி மின் பொறியாளர்-9445851678, ஆருகுச்சி பிரிவு அலுவலகம்-0423-2286317, உதவி மின் பொறியாளர்-9445851679, அதிகரட்டி பிரிவு அலுவலகம்-0423-2590447, உதவி மின் பொறியாளர்-9445851677.

## மழைநீர் சேகரிப்பு இல்லாத கட்டடங்களில் குடிநீர் இணைப்பு துண்டிப்பு!

மழைநீர் சேகரிப்பு அமைப்பு இல்லாத கட்டடங்களுக்கான அனுமதியை ரத்து செய்தல், குடிநீர் இணைப்பைத் துண்டித்தல் போன்ற நடவடிக்கைகளைத் தொடருவது என அரக்கோணம் நகராட்சி முடிவு செய்துள்ளது.

மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுக் கூட்டம் அரக்கோணம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள பி.ஆர்.அம்பேத்கர் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது.

நகராட்சி ஆணையர் செந்தில்முருகன் தலைமை தாங்கினார். நகர்மன்றத் தலைவர் (பொறுப்பு) கே.ராஜா, நகராட்சி பொறியாளர் ராஜவிஜயகாமராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நகரில் உள்ள கட்டடங்கள் மற்றும் இனி கட்டப்பட உள்ள, இப்போது கட்டப்பட்டுவரும் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கண்டிப்பாக வைக்க வேண்டும். மழைநீர் சேகரிப்பு இல்லாத கட்டடங்களுக்கு அனுமதியை ரத்து செய்வது, குடிநீர் இணைப்பைத் துண்டித்தல் போன்ற நடவடிக்கைகளை தொடருவது என முடிவு செய்யப்பட்டது.

திறந்தவெளியில் மல,ஜலம் கழிப்பதற்கு தடை!

இதைத் தொடர்ந்து, திறந்தவெளியில் மல,ஜலம் கழிப்பதைத் தடை செய்வது குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக குடிசைப் பகுதிகளில் வீடு, வீடாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பொது கழிவறைகளைச் சுத்தமான முறையில் பராமரிப்பது என்பன உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

## கோழி முட்டை ஏற்றுமதிக்கான தடையை விலக்க வலியுறுத்தல்

பறவைக் காய்ச்சல் பாதிப்பை அடுத்து இந்திய கோழி முட்டை, இறைச்சி ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை விலக்கிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கால்நடை பண்ணைப் பொருள் வர்த்தகர்கள் சங்கம் (எல்ஐஎஃப்டி) வலியுறுத்தியுள்ளது.

பிகார் மாநிலத்தில் கடந்த மார்ச் 9ஆம் தேதி ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பாதிப்பை அடுத்து, உலக கால்நடை சுகாதார அமைப்பில் (ஓஐஇ) அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு இந்திய கோழி இறைச்சி, முட்டைகளை ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை காரணமாக, நாட்டிலேயே கோழி முட்டை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் நாமக்கல் கோழிப் பணணையாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். இருப்பினும், பறவைக் காயச்சல் பாதித்து 90 நாள்கள் கடந்த நிலையில், நாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் பறவைக் காய்ச்சல் தொற்று இல்லாவிட்டால் மட்டுமே தடையை விலக்கிக் கொள்வது என்பது உலக கால்நடை சுகாதார அமைப்பின் விதிமுறையாகும்.

கடந்த மார்ச் 9ஆம் தேதி தடை விதிக்கப்பட்டு 90 நாள்கள் கடந்த நிலையில், தற்போது நாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் பறவைக் காய்ச்சல் பாதிப்புக்கான அறிகுறிகள் தென்படவில்லை. இதனால், இந்திய கோழி இறைச்சி, முட்டைப் பொருள்கள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை விலக்கிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்பது கால்நடை பண்ணைப் பொருள் வர்த்தகர்கள் சங்கத்தின் (எல்ஐஎஃப்டி) வேண்டுகோளாகும்.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் பி.வி.செந்தில் மத்திய கால்நடை பராமரிப்புத் துறைச் செயலருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பது:

இந்திய கோழி இறைச்சி, முட்டை பொருள்கள் ஏற்றுமதிக்கு தடை விதித்து 90 நாள்களான நிலையில், நாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்படவில்லை. இதனால், இந்தியாவை பறவைக் காய்ச்சல் பாதிப்பு இல்லாத நாடாக உலக சுகாதார அமைப்பு மூலம் அறிவிப்பு செய்திடவும், தொடர்ந்து இந்திய கோழி முட்டை, இறைச்சிப் பொருள்கள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை விலக்கிக் கொள்ளவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடர்ந்து, நாட்டின் ஒரு பகுதியில் ஏற்படும் பறவைக் காய்ச்சல் பாதிப்பால் பிற பகுதி கோழி முட்டை, இறைச்சி உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**14.06.2013 A.M**

---

## நிலக்கடலைக்கான உர நிர்வாகம் குறித்து வேளாண்துறை அறிவுரை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், வைகாசி பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நிலக்கடலை பயிருக்கான உர நிர்வாகம் குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

தர்மபுரி உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை:

தர்மபுரி மாவட்டத்தில் தற்போது, பரவலாக அனைத்து பகுதியிலும் நல்ல மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் அதிக அளவில் எண்ணெய் வித்து பயிர்களான நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நிலக்கடலை மகசூல் அதிகரிக்க உரிய முறையில் உர நிர்வாகம் செய்திட வேண்டும்.

மண் ஆய்வு பரிந்துரைப்படி உரமிட வேண்டும். இல்லையெனில் பொது பரிந்துரை அளவான மானவாரி பயிருக்கு ஏக்கருக்கு நான்கு கிலோ தழைச்சத்து தரவல்ல, ஒன்பது கிலோ யூரியா, நான்கு கிலோ மணிசத்து தரவல்ல, 25 கிலேபா சூப்பர் பாஸ்பேட், 18 கிலோ சம்பல் சத்து தரவல்ல, 30 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். இதனுடன், 80 கிலோ ஜிப்சம் அடியுரமாக இட வேண்டும்.

இறவை பயிருக்கு ஏழு கிலோ தழைச்சத்து தரவல்ல, 15 கிலோ யூரியா, 14 கிலோ மணிசத்து தரவல்ல, 87.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் இரண்டு கிலோ சாம்பல் சத்து தரவல்ல, 35 கிலோ மூரியேட் ஆஃப் பெட்டாஷ் உரங்களுடன், 80

கிலோ ஜிப்சம் அடியுரமாக இட வேண்டும்.

மேலும், 30க்கு பத்து செ.மீ., வெளியில் விதைப்பு செய்து, ஒரு சதுரை மீட்டரில், 33 செடிகள் என பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும். ஏக்கருக்கு நிலக்கடலை நுண்ணூட்டகலவை, ஐந்து கிலோவுடன் மணல் , 20 கிலோ சேர்த்து விதை விதைத்தவுடன் ஒரு ஏக்கருக்கு மேலாக தூவ வேண்டும்.

விதைத்த 40 முதல் 45 நாளில் இறவை பயிருக்கு, 40 முதல் 75வது நாளில் மானாவாரிப் பயிருக்கு ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைப்பதன் மூலம் தரமான காய்கள் உருவாகி நல்ல மகசூல் பெறலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மீன் பண்ணையில் தீவன தயாரிப்பு குறித்து பயிற்சி

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 21ம் தேதி, மீன் பண்ணைகளில், தீவன தயாரிப்பு மற்றும் மேலாண்மை எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 21ம் தேதி மீன் பண்ணைகளில் தீவன தயாரிப்பு மற்றும் மேலாண்மை எனும் தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில், நன்னீர் பண்ணைகளில் வளர்க்கப்படும் மீன் வகை, பண்ணை பராமரிப்பு முறை உள்ளிட்டவை குறித்து விளக்கப்படுகிறது.

பயிற்சியில், விவசாயிகள், பண்ணையாளர் என விருப்பம் உள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு, வரும், 17ம் தேதிக்குள் நேரில் வந்தோ அல்லது 04286 - 244345, 266650, 266244 ஆகிய எண்களில் தொடர்பு

கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டு நூல் விலை கிடுகிடு மேச்சேரியில் சேலை உற்பத்தி முடக்கம்

மேட்டூர்: சீனா மற்றும் நாட்டு பட்டுநூல் விலை அதிகரித்துள்ளதால், மேச்சேரி சுற்றுப்பகுதியில், பட்டு சேலை உற்பத்தி முடங்கியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் மேச்சேரி, நங்கவள்ளி, வனவாசி, ஜலகண்டபுரம், இளம்பிள்ளை, சேலம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைத்தறி, விசைத்தறி பட்டு நெசவுக் கூடங்கள் உள்ளது. இங்குள்ள நெசவாளர்கள் கைத்தறிகளில் ஒடிஸா, மினிகாஞ்சி, பேன்ஸி உள்ளிட்ட குறைந்த விலை பட்டு சேலைகளை நெய்கின்றனர்.

மேலும், காஞ்சிபுரம், ஆரணி பகுதி வியாபாரிகளிடம் இருந்து பட்டு நூல், ஜரிகை நெசவு கூலி பெற்றுக் கொண்டு, விலை உயர்ந்த பட்டு சேலைகளையும் நெய்து கொடுக்கின்றனர். மேச்சேரி சுற்றுப்பகுதியில் மட்டும், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பட்டுசேலை நெசவில் ஈடுபட்டுள்ளன. பட்டு நூல் திடீர் விலை உயர்வால், மேச்சேரி சுற்றுப்பகுதியில் பட்டுசேலை நெசவு முடங்கியுள்ளது.மேச்சேரியை சேர்ந்த ஜெயராமன் கூறியதாவது:இறக்குமதி வரி உயர்வால், மூன்று மாதத்துக்கு முன், 3,500 ரூபாயாக இருந்த ஒரு கிலோ சீனா வார்ப்பு பட்டு நூல் தற்போது, 4,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. மேலும், 3,100 ரூபாயாக இருந்த நாட்டு வார்ப்பு பட்டு நூல், 3,500 ரூபாயாக அதிகரித்துள்ளது. சீனா பட்டுநூல் விலை உயர்ந்ததை தொடர்ந்து, உள்ளூர் பட்டு நூல் விலையும் அதிகரித்துள்ளது. பட்டு நூல் விலை உயர்வுக்கு ஏற்ப, பட்டு சேலைகளுக்கும் விலை உயர்த்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. நூல் விலை உயர்வால் பட்டு சேலைகள் தரத்தை பொறுத்து குறைந்தபட்சம், 500 ரூபாய் முதல், 3,000 ரூபாய் வரை விலை உயரும் அபாயம் உள்ளது.

ஆனால், வியாபாரிகள் பழைய விலைக்கே சேலையை கொள்முதல் செய்கின்றனர். இதனால், கடந்த சிலவாரங்களாக நெசவாளர்கள், பட்டு சேலை உற்பத்தியை குறைத்து விட்டனர். பெரும்பாலான கைத்தறி நெசவுக் கூடங்கள் மூடப்பட்டு விட்டது. மேச்சேரி சுற்றுப்பகுதியில் பட்டுசேலை உற்பத்தி முடங்கியதால், நெசவாளர்களும் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். மீண்டும் நெசவு தொழில் சீரடைய வேண்டுமெனில், மத்திய அரசு, பட்டு இறக்குமதி வரியை குறைக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## செய்யூரில் உப்பு உற்பத்தி...குறைந்தது! 70 ஏக்கரில் மட்டுமே விளைச்சல்

செய்யூர்:பருவநிலை மாற்றம், கூலி ஆட்கள் பற்றாக்குறை, விலை குறைவு போன்ற காரணங்களால், செய்யூர் உப்பளங்களில் உப்பு உற்பத்தி, இந்த ஆண்டு, பெரிய அளவில் வீழ்ச்சி அடையும் என, எதிர்பார்க்கப் படுகிறது.செய்யூரில், மத்திய, மாநில அரசுகளுக்கு சொந்தமாக மொத்தம் 1,036 ஏக்கர் உப்பள நிலங்கள் உள்ளன. இவற்றில், 336 ஏக்கரில் அரிஜன உற்பத்தி சங்க உறுப்பினர்களும், 200 ஏக்கரில் தனி நபர்களும் உப்பு உற்பத்தி செய்து வந்தனர்.ஆட்கள் பற்றாக்குறை:ஆனால், தற்போது, அரிஜன உற்பத்தி சங்கம் செயல்படாததால், 336 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடக்கவில்லை.கடந்த ஆண்டு வரை செயல் பட்டு வந்த 200 ஏக்கரிலான உப்பளங்களில், தற்போது, 70 ஏக்கரில் மட்டும் உற்பத்தி நடக்கிறது.

இது குறித்து, உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுந்தரேசன் கூறுகையில், ""கடந்த ஆண்டு டிசம்பரில் பெய்த மழையால் தேங்கிய நீர், உப்பளத்தை விட்டு வெளியேறவில்லை. இதனால், வழக்கம்போல், 200 ஏக்கரில் உப்பு பயிர் செய்ய முடியவில்லை. அனைவரும் சேர்ந்து, மொத்தமே 70 ஏக்கரில் தான் உற்பத்தி செய்து வருகிறோம். இதனால், கடந்த ஆண்டை காட்டிலும் உப்பு உற்பத்தி குறைவாகவே இருக்கும்," என்றார்.மேலும், ""முன்னைப்போல், உப்பளங்களில் வேலை பார்க்க இளைஞர்கள் கிடைப்பதில்லை. மாதம் 5 ஆயிரம் ரூபாய் சம்பளம்

கிடைக்கிறது என்பதால், நகரங்களில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு வேலைக்கு சென்று விடுகின்றனர்.மேலும், உப்பு கொள்முதல் விலையும் குறைந்துவிட்டது. இதனால், உப்பு உற்பத்தி செய்வதில் ஆர்வம் குறைந்து வருகிறது," என்று கூறினார்.

பருவநிலை மாற்றம்:கடந்த ஆண்டு, 200 ஏக்கரில், 2000 டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு, 70 ஏக்கரில் மட்டுமே உப்பு உற்பத்தி நடக்கிறது. ஆனால், எதிர்பாராத @நரத்தில் மழை, உற்பத்தி காலம் குறைவு போன்ற காரணங்களால், உற்பத்தியாளர்கள் எதிர்பார்க்கும் 700 டன் உப்பு கூட கிடைக்காது என, தெரிகிறது.

இது குறித்து, உப்பு உற்பத்தி அலுவலகத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுகையில், ""உப்பு விளையும் காலத்தில் மழை பெய்ய கூடாது. இந்நிலையில், சமீபத்தில் பெய்த மழையால், உற்பத்தி குறைவு ஏற்பட வாய்ப்பு உள்ளது.கடந்த சில ஆண்டுகளாக, பருவநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மழை, வெயில் காலங்களில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றமும் உப்பு உற்பத்தியை, பாதித்து வருகிறது," என்றார்.இதனால், வெளியூர் வியா பாரிகள் வந்து கொள்முதல் செய்யும் அளவிற்கு பெரிய உப்பு உற்பத்தி மையமாக இருந்த செய்யூரில், இந்த தொழில் அழியும் நிலையில் உள்ளது.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

கோத்தகிரி பேரூராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் பழனி பேரணியை துவக்கி வைத்தார். பேரணியானது, பஸ் நிலையம், மார்க்கெட், காமராஜர் சதுக்கம் வழியாக பேரூராட்சி அலுவலகத்தை அடைந்தது. இதில், அரசு மேல்நிலைப்பள்ளி, செயின்ட் மேரீஸ் பள்ளி, அந்தோணியர் நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவியர் சுமார் 300 பேர் பங்கேற்று, மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து,

பதாகைகளுடன் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பேரூராட்சி தலைவர் வாப்பு தலைமை வகித்தார். பேரணியில், பேரூராட்சி கவுன்சிலர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மானியத்தில் விற்பனை செய்ய தீவன சோளம்

ஈரோடு: ஈரோடு மாவட்ட விவசாயிகளின் கால்நடை தீவன பிரச்னையை தீர்க்க, தமிழக அரசால் மானிய விலையில் சோளம் வழங்கப்பட உள்ளது. இந்த தீவன சோளம் மகராஷ்டிராவில் இருந்து ஈரோட்டுக்கு நேற்று வந்தது.

தமிழகம் முழுவதும் பருவ மழை தவறியதால், சென்னையை தவிர பிற மாவட்டங்கள் வறட்சி மாவட்டமாக, தமிழக அரசு அறிவித்தது. வறட்சி காலத்தில், கால்நடைகளின் தீவன பற்றாக்குறையை போக்க, கால்நடை துறை சார்பில் மானிய விலையில் தீவன சோளம் வழங்கப்பட உள்ளது.

விவசாயிகள் பாத்திகள் அமைத்து, விதைகள் தெளித்து, உரம் மற்றும் களை எடுத்து, அறுவடை செய்ய, ஏக்கருக்கு, 13 ஆயிரத்து, 600 ரூபாய் செல்வாகும். இதில், 50 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.

இம்மானியத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்யும் இத்தீவனத்தை, தங்கள் உபயோகத்துக்கு போக, மீதமுள்ள உபரி பயிரை, அருகில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மூலம், தீவன பற்றாக்குறை உள்ள கறவை மாடுகள் வளர்க்கும் உறுப்பினர்களுக்கு, 50 சதவீத மானிய விலையில் விற்க அறிவுறுத்தப்பட்டது.

இதற்கான தீவன சோளம், தமிழக அரசு கால்நடை துறை சார்பில், பல்வேறு மாநிலங்களில் இருந்து மொத்தமாக கொள்முதல் செய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்துக்கான தீவனம், மகராஷ்டிரா மாநிலம், பெல்லாரி தேசிய விதை கழகத்தில் இருந்து தீவனம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இத்தீவனம், ஈரோடு கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் அலுவலகத்துக்கு, லாரி மூலம்

நேற்று வந்தது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 1,900 ஏக்கர் விவசாயிகளுக்கு இத்தீவனம் வழங்கப்பட உள்ளது. 72 கிலோ மற்றும், 80 கிலோ எடை கொண்டு இத்தீவனம், கலெக்டர் உத்தரவுக்கு பின், அதிகாரிகள் முன்னிலையில் வழங்கப்படவுள்ளது

### கார்சாகுபடிக்கு பாபநாசம் அணை திறக்கப்படுமா...

விக்கிரமசிங்கபுரம் : நெல்லை மாவட்டத்தில் கார் சாகுபடி பாசனத்திற்காக பாபநாசம் அணை எப்போது திறக்கப்படும் என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக மாவட்டத்தில் கார் சாகுபடி பாசனத்திற்காக ஆண்டுதோறும் பாபநாசம் அணை ஜூன் மாதம் முதல் தேதியில் திறக்கப்படும். அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் பல்வேறு கால்வாய்களின் வழியாக சென்று பாசனத்திற்கு பயன்படுத்தப்படும். கால்வாய்களில் தண்ணீர் திறந்து விட்டவுடன் விவசாயிகள் விவசாயத்தின் ஆரம்பக்கட்ட பணிகளை செய்யத்துவங்கி விடுவார்கள். ஜூலை மாதம் வயல்களில் நடப்படும் நாற்று மொத்தம் 3 மாதங்களுக்குள் விளைந்து செப்டம்பர் மாதத்தில் மழைக்கு முன் அறுவடைக்கு தயாராகிவிடும். ஆனால் இந்த ஆண்டில் பாபநாசம் அணையில் போதுமான அளவு தண்ணீர் இருந்தும் கார் சாகுபடி பாசனத்திற்காக அணை நேற்று வரை திறக்கப்படவில்லை. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 65.90 அடியாக இருந்ததால் தேவையான தண்ணீர் இருந்தும் அணை திறக்கப்படவில்லையே என்று விவசாயிகள் புலம்பி வருகின்றனர். இந்நிலையில் விக்கிரமசிங்கபுரத்தில் கோடைமேலழகியான் கால்வாய் தண்ணீர் செல்லும் பகுதியில் பாலம் ஒன்று வேலை நடந்து வருவதால் வேலை முழுவதுமாக முடிந்த பின் அணை திறக்கப்படலாம் என்று விவசாயிகள் தெரிந்திருந்தாலும் காலதாமதமான கார்சாகுபடி பாசனத்தால் விவசாயிகளுக்கு பாதிப்பு தான் ஏற்படும் என்றும் சொல்கின்றனர். அதாவது 120 நாட்கள் நெல்

பயிரை கால தாமதமாக பயிர் செய்யும் போது குறைந்தது அக்டோபர் மாதம் வந்துவிடும். அப்போது அந்த மாதம் பெய்யக்கூடிய பருவ மழையால் அறுவடை பாதித்து விவசாயிகளுக்கு பயன் கிடைக்காத நிலை உருவாகிவிடும் என அஞ்சுகின்றனர். இந்நிலையில் கார் சாகுபடி பாசனத்திற்கு பாபநாசம் அணையை திறக்க அரசும், அரசு அதிகாரிகளும் காலதாமதப்படுத்துவதன் காரணம் என்னவென்று விவசாயிகளுக்கு விளங்காமல் இருக்கிறது. முதல்வரின் உத்தரவை மாவட்ட நிர்வாகம் எதிர்பார்த்து காத்து கொண்டிருக்கிறது என்று தெரியவருகிறது. மாவட்டத்தில் விவசாயமும் செழிக்க வேண்டும், விவசாயிகளும் பயனடைய வேண்டும் என்பதால் பாபநாசம் அணை காலதாமதம் இல்லாமல் திறக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கவனத்தில் கொண்டுவரவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்ப்பது நியாயம் தானே!.

## போதிய மழையின்மை, விளைச்சல் குறைவால் தமிழகத்தில் விர்...ரென உயரும் காய்கறி விலை

திருநெல்வேலி : தமிழகத்தில் போதிய மழையின்மை மற்றும் விளைச்சல் குறைவு காரணமாக காய்கறி விலை தாறுமாறாக உயர்ந்துள்ளன. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் விழிபிதுங்கியுள்ளனர். நெல்லை டவுன் மார்க்கெட்டிற்கு ஒட்டன் சத்திரம், ஓ‹ர், பொள்ளாச்சி, தேனி, கம்பம், விருதுநகர், சிவகாசி போன்ற வெளியூர்களில் இருந்து தக்காளி, கோஸ், உருளை கிழங்கு, பல்லாரி, பீட்ரூட், ஊருளை, போன்ற பல்வேறு காய்கறி வரத்துகள் அதிகமாக விற்பனைக்கு வருகின்றன. மேலும் மானூர், ரஸ்தா, கரிசல்குளம், திடியூர், செங்குளம், பொட்டல் புதூர், பாவூர்சத்திரம், ஆலங்குளம், கயத்தாறு, சுரண்டை போன்ற உள்ளூர்களில் இருந்து கத்தரி, வெண்டை, புடலைங்காய், தடியங்காய், மிளகாய் போன்றவைகளின் வரத்துகளும் அதிகமாக விற்பனைக்கு வருகின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக காய்கறி விலைகள் தாறுமாறாக உயர்ந்து வருகிறது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் காய்கறி வாங்க முடியாத

‹ழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நேற்றைய நிலவரப்படி, பீன்ஸ் கிலோ 80 ரூபாய், உல்லி 82-90 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. கோஸ் 24, கேரட் 40, பாகற்காய் 24, தடியங்காய் 12, பூசணி 10, கத்தரி 12, புடலை 24, புடலை 24, பல்லாரி 22, உருளை 22, சேனை 20, தக்காளி 40, மல்லி இலை 30, வெண்டை 20, மிளகாய் 40, அவரை 60, இஞ்சி 200 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. தமிழகம் முழுவதும் போதிய மழையின்மை, விளைச்சல் குறைவால் காய்கறி விலை அதிகரித்துள்ளது. இந்த விலை உயர்வு தொடர்ந்து சில நாட்கள் நீடிக்கும் எனவும் கூறப்படுகிறது. விர்...ரென ஏறும் விலை: நெல்லை டவுன் மற்றும் பாளை.,மார்க்கெட்டுகளில் கடந்த சில நாட்களாக காய்கறி வரத்துகள் மிகவும் குறைந்துவிட்டன. மேலும் இந்த மாதம் மூகூர்ந்த நாட்களும் வருவதால் காய்கறி விலைகள் கூடுமே தவிர, குறைவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர். கடந்த சில நாட்களாக விஷம் போல் ஏறிவரும் விலை உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் விழிபிதுங்கியுள்ளனர். காரணம் என்ன? தமிழகத்தில் கடந்த ஆண்டு போதிய அளவு மழை இல்லாததால் விளைச்சல் குறைந்துவிட்டன. இதனால் மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்துகள் குறைந்துவிட்டன. மேலும் லாரி வாடகை உயர்வு, டீசல் விலையேற்றம், டோல் கேட் கட்டணம் என போன்ற பல்வேறு வகைகளில் கட்டண உயர்வு அதிகரித்து விட்டதால் காய்கறி விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து விட்டன. மேலும் முகூர்த்த நாட்களில் காய்கறிக்கு தட்டுப்பாடு ஏற்படுவதால் விலை உயர்வு தவிர்க்க முடியாததாக விடுகிறது என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## நீர்வடிப்பகுதி திட்டத்தில் 2,706 விவசாயிகள் பயன்

காரியாபட்டி:"" நபார்டு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின்படி,2ஆயிரத்து706 விவசாயிகள் பயன் பெறுவர்,''என, கலெக்டர் ஹரிஹரன் கூறினர்.
காரியாபட்டி அழகியநல்லூரில், நபார்டு நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை துவக்கி வைத்து அவர்
பேசியதாவது:
கிராம பகுதி மானாவாரி நிலங்களில், சிறு மற்றும் குறு விவசாயிகளின்

பங்களிப்போடு, மண்கரை , பண்ணை குட்டை , பழ மரக்கன்றுகள் வழங்குதல், நிலம் இல்லாதவர்களின் வாழ்வாதாரத்திற்கும், பெண்களின் வாழ்வாதாரத்திற்கும் உதவி செய்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன.

இத்திட்டத்தில் ஆயிரத்து 123 பணிகள், 30.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்படுவதன் மூலம், இரண்டாயிரத்து 706 விவசாயிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனடைவர்.

பண்ணைக் குட்டைகளில் சேகரிக்கப்படும் மழை நீரை, விவசாயிகள் ஒரு போகம் சாகுபடிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். மாவட்டம் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக இருப்பதால், விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தை பயன்படுத்திக் கொள்வதோடு, முழு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும், என்றார்.

துணை பொது மேலாளர் நடராஜன்,துணை இயக்குனர் பழனிச்செல்வம், மாவட்ட திட்ட பொறியாளர்
கணேசன், உதவி பொறியாளர் சவுந்திர பாண்டியன், விரிவாக்க அலுவலர் முருகவேல், நபார்டு உதவி பொது மேலாளர் சுப்பிரமணியன், முன்னோடி வங்கி மேலாளர் ரமேஷ், மல்லாங்கிணர் பாரத வங்கி மேலாளர் பால
கணேஷ், இணை இயக்குனர்
வன்னியராஜன், ஊராட்சித் தலைவர்
பிச்சையம்மாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பண்ணை குட்டைகள் அமைக்க அழைப்பு

தேவாரம்:தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், தனியார் தோட்டங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க, ஊராட்சி ஒன்றியங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஊராட்சிகளில் உள்ள கண்மாய், ஊரணிகள், நீர் வரத்து ஓடைகளை தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் தூர் வாரி ஆழப்படுத்தப்பட்டது. தமிழகத்தில் மழை காலம் துவங்கவுள்ளது. சீசன் துவங்கும் முன் நீர் வரத்து ஓடைகளுக்கு அருகில் உள்ள தனியார் தோட்டங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க அனைத்து ஒன்றியங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

காட்டாற்று ஓடை வரும் பாதையில் உள்ள தனியார் தோட்டங்களில் குறிப்பிட்ட அளவில் பண்ணை குட்டை அமைக்க வேண்டும். இதற்கு விருப்பம் உள்ள விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் சிட்டா, அடங்கலுடன் ஊராட்சிகளை தொடர்பு கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.மழை நீர் சேமிக்க தனியாரை ஊக்குவிக்கும் விதமாக பண்ணை
குட்டைகள் அமைக்கப்
படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தீவன தட்டுப்பாடு: நஷ்டத்தில் கால்நடை வளர்ப்போர்

வருஷநாடு:கடமலைமயிலை ஒன்றியத்தில் தீவன தட்டுப்பாடு, விலைஉயர்வால் கால்நடை வளர்ப்போர் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.
கடமலைமயிலை ஒன்றியத்தில் 250 மலைக் கிராமங்கள் உள்ளன. இங்கு விவசாயத்திற்கு அடுத்தப்படியாக கால்நடை வளர்ப்பு, முக்கியத் தொழிலாக விளங்குகிறது. கடந்தாண்டு பருவமழை மழை ஏமாற்றி விட்டதால் வைகை ஆறு,தோட்டகிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நீர் வரத்து இல்லை. இதனால் கால்நடை வளர்ப்போர்கள் மாடுகளுக்கு தீவனம் இல்லாமல் வெளி மாவட்டங்களில் இருந்து வைக்கோல் உள்ளிட்ட தீவனங்களை வாங்கி வருகின்றனர். தற்போது ஒரு லோடு டிராக்டர் வைக்கோல் 10 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.
பால்மாடு வளர்ப்போர் மாதத்திற்கு ஒரு லோடு வைக்கோல் வாங்குகின்றனர். ஆனால் மாதத்திற்கு ஆறாயிரம் ரூபாய் தான் பால் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.வறட்சி காலங்களில் கால்நடை வளர்ப்போர் மாடுகளை விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர்

## கலப்பட உரம்: விவசாயிகள் புகாரால் ஆய்வு

கன்னிவாடி:திண்டுக்கல்லில் உள்ள தனியார் உரக்கடையில் வாங்கிய பொட்டாஷ் உரத்தில் இருந்த செங்கல், கரித்தூள் கலப்படம் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

கன்னிவாடி அருகே, சந்தமநாயக்கன்பட்டியைச் சேர்ந்த விவசாயி கருப்பசாமி. திண்டுக்கல்லில் உள்ள ஒரு தனியார் உரக்கடையில், பொட்டாஷ் உரம் நான்கு மூடைகள் வாங்கினார். தனது வயலிற்கு சென்று, மூடைகளைப் பிரித்தபோது, அதில் செங்கல் தூள், கரித்துண்டு கலந்திருந்தது தெரியவந்தது.

அவர் கூறுகையில்; ""கடை உரிமையாளர், வேளாண்துறை தரக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு தகவல் தரப்பட்டது. கடை உரிமையாளர், பிரிக்கப்படாமல் இருந்த மூன்று மூடைகளை எடுத்துக்கொண்டு, புதிதாக நான்கு மூடைகள் பொட்டாஷ் தந்தார்," என்றார்.

மாவட்ட வேளாண்மை தரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குனர் செல்வராஜ் கூறுகையில்; ""விதிப்படி, இதுபோன்ற பிரச்னைகளில் விவசாயிடம் இருந்து மாதிரி எடுக்கக்கூடாது. சம்பந்தப்பட்ட மூடைகளின் பேட்ச் எண், தயாரிப்பு தேதி விபரங்களைக் கொண்டுள்ள, அதே உரக்கடையில் இருந்த 10 மூடைகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்விற்குப்பின்
நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

## தஞ்சையில் வேளாண் பணி 10 மாணவியர் கள ஆய்வு

தஞ்சாவூர்: தஞ்சையில், வேளாண்மைத்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகள் குறித்து திருச்சி மாணவியர் 10 பேர் நேரில் பார்த்து, படிப்புக்காக கள ஆய்வு நடத்தினர்.

தஞ்சையில், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், விதை சுத்திகரிப்பு நிலையம், வேளாண்மை விரிவாக்க மையம், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், மண் வகையீடு மற்றும் நிலப்பயன்பாடு நிறுவனம், உழவர் சந்தை, வேளாண் விற்பனை மற்றம் வணிக பணிகள், தோட்டக்கலைத்துறை விரிவாக்க பணி ஆகியவை மூலம் விவசாயிகளுக்கும், வேளாண்மை வளர்ச்சிக்கும் நவீன தொழில்நுட்பங்களை அளித்து, பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பணிகளை திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவ, மாணவியர் 10 பேர் நேரில் பார்வையிட்டு, படிப்புக்காக கள ஆய்வு மேற்கொண்டனர்.

விவசாயிகளின் அன்றாட நிகழ்வுகளையும், வேளாண்மைத்துறையில் வழங்கப்படும் பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கங்களையும் அறியவும் பயிற்சி வகுப்பில் பங்கேற்றுள்ளனர். இதற்கான ஏற்பாட்டை தஞ்சை வேளாண்மை உதவி இயக்குனர் நெடுஞ்செழியன் தலைமையில் அதிகாரிகள், அலுவலர்கள் செய்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**14.06.2013 A.M**

---

## ஏக்கருக்கு ரூ45,000 வருமானம் பெற மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பங்கள் வேளாண் அதிகாரி விளக்கம்

சேதுபாவாசத்திரம், : மக்காச்சோளம் சாகுபடியில் ஏக்கருக்கு ரூ.45,000 வருமானம் பெறக்கூடிய தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் அதிகாரி விளக்கமளித்துள்ளார்.

சேதுபாவாசத்திர வட்டார வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மக்காச்சோளம் கால்நடை தீவனமாகவும், சமையல் எண்ணை எடுப்பதற்காகவும் பயன்படுவதோடு தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மக்காச்சோளம் மைதா, சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ&1, கே&1, கங்கா&5, கே.எச்&1, 2, 3, கோ.எச்.எ&5, எம்&900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே&6240, பயனீர்&30 வி&62, பயனீர்&30 வி&92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும்.

ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூஞ்சாண நோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மாவிரிடி என்ற உயிரியல் பூஞ்சாண கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின்னர் விதைக்கவேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்யவேண்டும். ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியாவை ஆரிய வடி (அரிசி) கஞ்சியில் கலந்து, அதனுடன் பூஞ்சாண விதை நேர்த்தி செய்த

விதையை கலக்கவேண்டும். நிழலில் அரை மணிநேரம் உலர்த்தி பின்னர் 60 ஜ் 20 செமீ இடைவெளியில் அதாவது பாருக்கு பார் 60 செமீ செடிக்கு செடி 20 செமீ இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செமீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். ஒரு சமீயில் 8 செடிகளும் ஒரு ஏக்கரில் 32,240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவேண்டும்.

விதைப்புக்கு முன் ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவு உரம் இடவேண்டும். அத்துடன் நடவு வயலில் ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். சாகுபடிக்கு 119 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 34 கிலோ பொட்டாஷ் உரம் மொத்தமாக பரிந்துரைக்கப்படும். இதில் அடியுரமாக 30 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். விதைத்த 25ம் நாள் முதல் மேலுரமாக 60 கிலோ யூரியா, 45ம் நாள் 29 கிலோ யூரியா, 17 கிலோ பொட்டாசும் இடவேண்டும். விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண்ணில் போதிய ஈரம் இருக்கும்போது களைக்கொல்லியான அட்ரசின் 50 சதவீதம், நனையும் தூள் 200 கிராம் அல்லது ஆலாகுளோ 1.6 லிட்டர் என்ற அளவில் 360 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான மூலம் தெளிக்கவேண்டும். தேவைக்கேற்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்யவேண்டும். பூக்கும் தருணத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தால் ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ.45,000 வரை வருமானம் பெறலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## உளுந்தில் அதிக மகசூல் பெற வளர்ச்சி ஊக்கி தெளியுங்கள் வேளாண் அதிகாரி அறிவுரை

திருக்காட்டுப்பள்ளி, : உளுந்தில் அதிக மகசூல் பெற வளர்ச்சி ஊக்கி தெளிக்கவேண்டும் என வேளாண் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

பூதலூர் அடுத்த திருக்காட்டுப்பள்ளி, ஒன்பத்துவேலி, விஷ்ணம்பேட்டை, தீடசசமுத்திரம், கூத்தூர், அலமேலுபுரம், அகரப்பேட்டை, திருச்சென்னம்பூண்டி, பழமார்நேரி உள்ளிட்ட கிராமங்களில் சித்திரை பட்ட இறவை உளுந்து சாகுபடி செய்யப்பட்டு தற்போது பூக்கும் பருவம் முதல் காய் பிடிக் கும் பருவம் வரை உள்ளது.

இதில் அதிக மகசூல் பெற பயறு ஒன்டர் என்ற வளர்ச்சி ஊக்கியை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து, ஒட்டு திரவம் சேர்த்து வெயில் இல்லாத காலை அல்லது மாலை வேளையில் இலைகள் நன்கு நனையுமாறு தெளிக்கவும். ஊட்டசத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளால் வறட்சியை தாங்கும் தன்மை அதிகரித்து உளுந்தின் எடை மற்றும் தரம் கூடுகிறது.

பயறு ஒன்டர் திருக்காட்டுப்பள்ளி மற்றும் அகரப்பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் 50 சதவீத மானியத்தில் அளிக்கப்படுகிறது. இதை வாங்கி விவசாயிகள் பயன்பெறலாம்.

ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 20 லிட்டர் தண்ணீரில் முதல் நாளே ஊறவைத்து, மறுநாள் வடிகட்டி தெளிவை எடுத்து 180 லிட்டர் தண்ணீர் சேர்த்து கை தெளிப்பான் மூலம் மாலை வேளையில் பூக்கும் தருணத்தில் ஒருமுறையும், 15 நாட்கள் கழித்து ஒருமுறையும் தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்கள் பிடிக்கும் திறன் கூடுகிறது. மகசூல் அதிகம் கிடைக்கிறது. எனவே உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இதில் ஏதாவது ஒருமுறையை கடைபிடித்து கூடுதல் உளுந்து மகசூல் பெறலாம். இத்தகவலை பூதலூர் வேளாண் உதவி இயக்குநர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## வரத்து சரிவு, தேவை அதிகரிப்பால் பரமத்தி வேலூர் மண்டிகளில் வெற்றிலை விலை உயர்வு

பரமத்தி வேலூர், : பரமத்தி வேலூர் பகுதியில் காவிரி ஆற்று படுகையில் வெற்றிலை சாகுபடி பிரதானமாக உள்ளது. பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, குச்சிபாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி, ஓலப்பாளையம், எல்லக்காட்டூர், எருமநாயக்கன்பாளையம் உள்ளிட்ட இடங்களில் அறுவடை செய் யப்படும் வெற்றிலைகளை பரமத்தி வேலூரில் உள்ள மண்டிகளு க்கு மொத்தமாக கொண்டு வந்து ஏலத்தில் விற்பனை செய்து வருகின்றனர்.

நேற்று நடைபெற்ற ஏலத்தில் 104 கவுளி கொண்ட கற்பூரி வெற்றிலை கி2500 ஆக விலை உயர்ந்தது. கடந்த வாரம் இந்த ரகம் கி2300க்கு விற்பனையானது. கடந்த வாரம் கி1500க்கு விற்பனை செய்யப்பட்ட கற்பூரி வெற் றிலை 2வது ரகம் நேற்று நடந்த ஏலத்தில் கி1800க்கு விற்பனையானது. இதே போல், கடந்த வாரம் கி4800க்கு விற் பனை செய்யப்பட்ட வெள்ளைக்கொடி முதல் ரகம் கி5 ஆயிரமாகவும், வெள்ளைக் கொடி 2வது ரகம் கி3200ல் இருந்து கி3500 ஆகவும் விலை உயர்ந்தது. தொடர்ந்து முகூர்த்த தினங்கள் வருவதாலும், தேவை அதிகரிப்பு மற்றும் மண்டிகளுக்கு வரத்து சரிந்துள்ளதாலும் வெற்றிலை விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

2000 ஏக்கரில் சாகுபடி பாதிப்பு

பரமத்தி வேலூர் பகுதியில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தண்ணீர் பற்றாக்குறையால் பணப்பயிரான வெற்றிலை சாகுபடி படுத்து விட்டதாக விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: காவிரி ஆற்று படுகையில் ஆண்டு முழுவதும் வெற்றிலை சாகுபடி நடைபெறும். பரமத்தி வேலூர் வெற்றிலை பல்வேறு இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக கடும்

வறட்சி நிலவி வருவதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கொடிக்கால்களுக்கு உரிய நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடிய வில்லை. இதனால், வெற்றிலை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. அரசு நிவாரணம் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வெற்றிலை விவசாயிகள் தெரிவித்தனர்.

### நடப்பாண்டு மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி பொய்த்தது

ஈரோடு, :ஈரோடு மாவட்டத்தின் முக்கியமான குடிநீர் ஆதாரமாகவும், பாசன ஆதாரமாகவும் விளங்குவது கீழ்பவானி அணை எனப்படும் பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த உயரம் 120 அடி உயரமாக இருந்த போதிலும் 105 அடி உயரத்திற்கு தண்ணீர் தேக்கி வைக்க முடியும். அதிகபட்சமாக 32 டிஎம்சி., நீர்இருப்பு வைத்து அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கலாம். ஆண்டுதோறும் தடப்பள்ளி & அரக்கன்கோட்டை வாய்க்காலில் பாசனத்துக்காக ஏப்ரல் 15 முதல் குறுவை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். அதேபோல காலிங்கராயன் வாய்க்காலில் ஜூன் 16ம் தேதி முதல் குறுவை சாகுபடி பணிகள் துவங்குவதற்காக ஆற்றின் வழியே தண்ணீர் திறக்கப்படுகிறது. இவ்விரு பாசனப்பகுதியிலும் வழக்கமாக 12,500 ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. குறுவையை தொடர்ந்து கீழ்பவானி பாசன வாய்க்காலில் ஆகஸ்ட் 15 முதல் சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இந்த சீசனில் கிட்டத்தட்ட 72 ஆயிரம் முதல் 90 ஆயிரம் ஏக்கர் வரையிலும் நெல் சாகுபடி செய்யப்படுவது வழக்கம்.

மொத்தத்தில் காவிரி டெல்டா பாசனத்துக்கு அடுத்தபடியாக ஈரோடு மாவட்டத்தில் தான் நெல் சாகுபடி அதிகளவில் நடைபெறுகிறது. கடந்த ஆண்டு கடுமையான வறட்சியின் காரணமாக பவானிசாகர் அணையின் நீர்மட்டம் ஏப்ரல் மாத இறுதியில் 55 அடியாக இருந்தது. இருப்பினும், நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மற்றும் கேரளாவில் தென்மேற்கு பருவமழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில்

தடப்பள்ளி& அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் வாய்க்காலில் குறுவை சாகுபடிக்காக ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் காரணமாக தடப்பள்ளி& அரக்கன்கோட்டை பாசனம் மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியில் 15,250 ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டது.
குறுவை சாகுபடியில் நெல்மணிகள் பால் பிடிக்கும் பருவத்தின்போதே பவானிசாகர் அணையின் நீர்வரத்து வெகுவாக குறைந்து விட்டதால் மிக சொற்ப அளவில் தான் தண்ணீர் திறக்கப்பட்டது. இருப்பினும், கிடைத்த சொற்ப அளவிலான நீரை கொண்டு தடப்பள்ளி& அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் பாசன விவசாயிகள் குறுவை பயிரை தட்டுத்தடுமாறி காப்பாற்றினர்.
இதனால் கடந்த ஆண்டு மொத்தமே குறுவை சாகுபடி சீசனில் 15,250 ஏக்கரில் மட்டுமே நெல் சாகுபடி ஆனது. அதன்பிறகு அணையின் நீர்மட்டம் படுபாதாளத்திற்கு சென்றதால் சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்க முடியாமல் போனது. கீழ்பவானி வாய்க்கால் பாசனப்பகுதியில் முதலாம் மண்டலத்திற்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கு வெறும் 15 நாட்கள் மட்டுமே உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது. அதைதொடர்ந்து தடப்பள்ளி& அரக்கன்கோட்டை, காலிங்கராயன் மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் சம்பா சாகுபடி முற்றிலும் இல்லாமல் போனது. இதனால் மாவட்டம் முழுவதும் விளைநிலங்களும், வயல்வெளிகளும் தரிசாக போட வேண்டிய அவலம் ஏற்பட்டது.
கடந்த 2011&12ம் ஆண்டில் மட்டும் மாவட்டம் முழுவதும் தடப்பள்ளி&அரக்கன்கோட்டை, காலிங்கராயன், கீழ்பவானி பாசன பகுதிகளில் மொத்தம் 85 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதுவே கடந்த 2012&13ம் ஆண்டில் தடப்பள்ளி& அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசன பகுதியில் குறுவை சாகுபடி மூலம் வெறும் 15250 ஏக்கர் மட்டுமே சாகுபடி

ஆனது. தடப்பள்ளி அரக்கன்கோட்டையில் மட்டும் 12,562 ஏக்கரில் குறுவை மூலம் சாகுபடி நடந்தது.

இந்நிலையில் நடப்பு 2013&14ம் ஆண்டிலும் பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடுமையான வறட்சியே நீடிப்பதால் நடப்பாண்டில் குறுவை சாகுபடி முற்றிலும் இல்லாமல் போனது. இதனால் விவசாயிகள் கடும் சோகமடைந்துள்ளனர்.

இதுகுறித்து வேளாண் துறையினர் கூறியதாவது: கடந்த ஆண்டு கடுமையான வறட்சி நீடித்த போதிலும் குறுவை சாகுபடிக்காக தடப்பள்ளி&அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டதால் குறுவை சாகுபடி மட்டுமே நடைபெற்றது. இதன் காரணமாக மொத்தம் 15,250 ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி ஆனது. நடப்பாண்டில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்று விட்டதால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதேபோல காலிங்கராயன் வாய்க்கால் பகுதியில் பராமரிப்பு பணிக்காக தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டது.

எனவே இந்த ஆண்டு ஒரு ஏக்கரில் கூட குறுவை நெல் சாகுபடி செய்ய முடியாமல் போனது. தற்போது பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 32 அடியாக உள்ளதால் சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் திறக்கப்படுமா என்பதை நீர்வரத்தை வைத்து தான் முடிவு செய்ய முடியும். எனவே நீண்ட இடைவெளிக்கு பிறகு ஈரோடு மாவட்டத்தில் குறுவை சாகுபடி சீசனில் ஒரு ஏக்கர் நெல் கூட பயிரிடப்படவில்லை. இவ்வாறு வேளாண்துறையினர் தெரிவித்தனர்.